# இலங்கையின் தேர்தல் தொடர்பான அரசியல் வன்செயல்கள் பற்றிய வரலாறு



RES
T 324
ILA

PAFFREL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
27 2006
LIBRARY

ஜப்பான்

உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி

அச்சுப்பதிப்பும் நிதியுதவியும் ஜப்பானிய அரசாங்கம் (ஓ.டி.ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாட்டின் வெளியீடான இச் சிறு நூலில் எமது நாட்டு அரசியல் செயற்பாடுகளின், குறிப்பாக தேர்தல் வன்முறைகள் பற்றிய சுருக்கமான தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

நாம் எமது ஆட்சியாளர்களையும் அரசாங்கங்களையும் தெரிவு செய்யும் செயற்பாடே ஒரு நாட்டின் நல்லாட்சியின் முக்கிய அம்சமாகும். தமது பிரதிவாதிகளுடனும், மாற்றுக் கட்சிகளுடனும் செய்யும் கொடுக்கல் வாங்கலின் போதும், அரசியல் அதிகாரத்தை நாடிச் செல்லும் போதும் அதனைப் பாவிக்கும் போதும், அரசியல்வாதிகளினதும் மற்றும் அரசியல் கட்சிகளினதும் நடத்தையிலும், தேர்தல் செயற்பாட்டிலும் வன்முறை தலைதூக்குமானால் சனநாயக முறைமை மற்றும் நல்லாட்சி என்பவற்றிற்குமான இயலுமை, ஆரம்பத்திலிருந்து ஊழல் மயப்படுத்தப்பட்டுள்ளமைக்கு இது ஒரு சிறந்த அடையாளமாகும்.

இத்தகைய முறைமையின் கீழ் சட்டத்தின் அதிகாரம் ஆபத்துக்குள்ளாகும் பிரசைகளின் அடிப்படை உரிமைகள் உறுதிப்படுத்தப்படுவதில்லை. சமூக ஒற்றுமை, சமூகப் பாதுகாப்பு தொடர்பாக நிச்சயமற்ற தன்மை உருவாகும். எனவே இந்த உபத்திரவங்களை எமது அரசியல் வாழ்க்கையிலிருந்து கலைந்தெறிவதற்குத் தொடர்ந்து செயற்பாட்டில் ஈடுபடுவது பிரசைகளாகிய எமது விசேட கடமையாகும்.

சிவில் சமூக அமைப்புக்களின் குழுவொன்றும், இத்துறையில் ஆர்வம் காட்டிய பிரசகைள் குழுமமும் ஒன்றிணைந்து இக் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு கருத்தரங்குகளையும் கலந்துரையாடல்களையும் நடத்தின. மேற்படி குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளத் தேவையான முன்முயற்சியுடனும். பிரசைகள் இது தொடர்பாக உதவக் கூடிய முறையையும் தெரிந்து கொள்வதற்கு இதன் அடிப்படைக் கூறுகளும் அடியெடுப்புக்களும் இச் சிறு நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

வன்முறையற்ற அரசியலைக் குறிக்கோளாகக் கொண்ட செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு பிரசைகளை ஊக்குவிப்பதை நோக்காகக் கொண்டு இதுவரை பிரதேச மட்டத்தில் கலந்துரையாடல்கள் சில நடத்தப்பட்டன. பஃப்ரல் அமைப்பும் ஏனைய சிவில் சமூக அமைப்புக்களும், ஊடகங்களும் தொடர்பாடல் பிரிவுகளும் சமயப் பிரிவுகளும் ஆராய்ச்சிக் குழுக்களும் ஏனைய ஆர்வமுள்ள பிரசைகளும் இச் செயற்பாட்டை இறுதிவரை முன்னோக்கிக் கொண்டு செல்ல அர்ப்பணிப்புடன் இருக்கிறார்கள். இம் முயற்சியின் ஓர் அங்கமாகவே இச் சிறு நூல் வெளியிடப்படுகிறது.

599958

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் அரசியல் வன்முறையை நீக்கிவிட்டு சனநாயக முறையை உறுதிப்படுத்துதல்



சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையின் அரசியல் துறையில் வன்செயல்கள் இடம்பெற்றதோடு வளர்ச்சியும் ஏற்பட்டுள்ளது. அடைந்துள்ளன. பல்வேறுபட்ட காரணங்களினால் இவை உருவாகி வளர்ச்சி அடைந்துள்ளன. பின்வரும் விடயங்கள் வன்முறைச் செயற்பாட்டில் முக்கிய இடத்தை வகிக்கின்றன.

- இனங்களுக்கு இடையிலான வன்முறை
- மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) வன்முறை விசேடமாக 1987-89 கிளர்ச்சிக்கால கட்டம்.
- தேர்தல் வன்செயல்களும் கட்சிகளுக்கிடையிலான மோதல் காரணமாக ஏற்படும் வன்செயல்களும்

## வரலாற்றுப் பின்னணி வன்முறைக் கருத்தியலின் அடிப்படைகள்

வன்முறையின் அடிப்படைக் கருத்தியல் உள்ளூர் மற்றும் தேசிய மட்டத்தில் அமைந்துள்ளன. உள்ளூர் மட்டத்தில் தனிநபர் பகைகளும், நோய் நொடிகள் சம்பந்தமாக செயற்படும் தீர்வு முறைகளுள் காணப்படும் மக்களின் நடைமுறைகளும் அமைகின்றன. சண்டியன் தொடர்பான பாத்திரம் (தென் மாகாண சபை தேர்தலின் போது குறிப்பிட்டதோர் பொதுஜன ஐக்கிய முன்னணி அபேட்சகர், பிரபல்யம் அடைந்திருந்த ''சண்டியன்'' எனும் பதத்தைப் பெருமையுடன் மேற்கோள் காட்டியமை உங்களுக்கு நினைவிருக்கலாம். தவறுகளுக்குத் தண்டனை மூலம் நீதியை வழங்கும் நிலப் பிரபுத்துவ கருத்தியலும் உதாரணம் எழுவதை உள்ளடங்கும். வெளிநாட்டுக் கருத்தியல் அடிப்படைகள் கொடூர அரசாங்கங்களை, புரட்சியின் மூலம் மாற்றலாம் என மார்க்சீய சம்பிரதாயங்கள் போதித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கரவாத அமைப்புகளும் இம்முறைகளைக் கடைப்பிடித்தன. சம்பிரதாய இடதுசாரிக் கட்சிகள் பிரதான சனநாயக நீரோட்டத்தில் இணைந்தமை சனநாயகத்தின் வெற்றியாகும். ஆனால் அவர்களின் கருத்தியலும் மொழியும் (முதலாளித்துவம் ஒழிக! வீழ்க! போன்ற சுலோகங்கள் வர்த்தக வைராக்கியத்தையும் முதலாளித்துவ சமூக அமைப்பை ஒழிப்பதையும் பிரதிபலித்தன). வன்முறை இயக்கங்கள் தொடர்பான கோட்பாட்டு ரீதியான வழக்கு வன்முறைக் கலாசாரத்திற்கு வித்திட்டது எனக் கூறலாம். மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) புளொட் மற்றும் ஈ.பீ.ஆர்.எல்.எவ் போன்ற தமிழ் குழுக்களும் நடைமுறைச் சமூக அநீதிகளை நீக்குவதற்கான ஒரே மார்க்கமாக பயங்கரவாத நடவடிக்கைகளைப் பயன்படுத்தி அரசுக்கு எதிரான ஆயுதக் கிளர்ச்சியை உருவாக்க இளைஞர்களை ஊக்குவிக்க முயன்றன. இக் கருத்தியல் மற்றும் அமுல் செய்யப்பட்ட முறைமை என்பன எமது நாட்டின் அரசியல் கலாசாரத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. அரசியல் கருத்து மோதலைத் தீர்ப்பதற்கு பல சந்தர்ப்பங்களில் வன்முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.



மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) தேசிய சுபாவத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஆங்கிலத்திற்கும் சுயமொழிகளுக்கும் இடையிலான இடைவெளியும் ஓரளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சுதந்திரமான கருத்தியல் மரபுடனான உறவுகள் செயலிழந்தமை காரணமாக மேற்படி இயக்கம் வழிதவறியது. ஆங்கிலக் கல்வியைப் பெற்றிருந்த மார்கசிஸ்டுகள், மார்க்சிஸம் பற்றிய அரசியல் கல்வியை ஊட்டினர். திறனாய்வு ரீதியான அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு சுதந்திரமான கருத்தியற் கல்வியை ஊட்டுவதில் ஜனநாயக வாதிகள் என்று கூறிக் கொள்ளும் கட்சிகளும் நடைமுறையில் செயற்படவில்லை. சுதந்திரக் கருத்தியல், ஜனநாயகம் பற்றிய நூல்களைக் கற்பதற்கு சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளை மாத்திரம் கற்ற இளைஞர்களுக்கு மிகக்குறைந்த சந்தர்ப்பமே இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1936-1956 வரையிலான ஜனநாயக அரசியல் செயற்பாடு




1950கள் வரை அரச சபைகளுக்கும், உள்ளூராட்சி மன்றங்களுக்கும், பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் போது அரசியல் கட்சிகளின் ஜனநாயக ரீதியான அரசியல் நடவடிக்கைகள் ஒப்புநோக்கில் வன்முறையற்றதாகவே அமைந்தது. சுதந்திரத்திற்குப் பின்னைய கால கட்டத்தில் அரசியல் கட்சிகளிடையே போட்டி வலுப்பெற்றது. அதுவரை அரசியல் நடத்தையில் எதுவித தாக்கத்தையும் மோதல்கள் உள்ளூர் பிரதேசங்களுக்கு வரையறுக்கப்பட்டதோடு தனிப்பட்ட வேட்பாளர்களிடையிலான ஒரு போட்டிக்கு மாத்திரம் அது வரையறுக்கப்பட்டது. அன்று சமூகப் பிரிவினரிடையே நிலவிய வன்முறை அரசியல் நடத்தைகளின் பால் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்று இதன் மூலம் கருத முடியாது. இச் சமூகப் பிரிவினர் மத்தியில் நிலவிய வன்முறைச் செயற்பாடுகளிடையே மோதல்கள் இடம் பெற்றன. இவை சாதியை அடிப்படையாகக் கொண்டவையாகவும், மரபு ரீதியான பிரமுகர்கள் குழுமம் சில சமூகப் பிரிவினரை ஓரம் கட்டுவதற்கும் ஒடுக்குவதற்கும் முற்பட்டன. கிராமிய வாழ்விலும், அரசியலிலும் காணக்கூடிய ''சண்டியன் நடத்தைகளைப்'' போலவே கசிப்பு, போதை வஸ்த்துக்கள், கடத்தல்கள், களவுகள், நகர்ப்புற அதிகாரக் கட்டமைப்பு, மற்றும் அரசியல் கட்சிகளால் மேற்படி அதிகாரக் கட்டமைப்பு பயன்படுத்துதல் என்பன அமுலில் இருந்தன.

1956 வரையிலான முதற்கட்டத்தில் நிலவிய அரசியல் வன்முறைகள் அதிகாரம் படைத்த தனி நபர்களின் ''அதிகாரப் பிரதேசங்களாக''வே அமைந்தன. இவற்றுள் தேர்தல் வட்டாரங்களில் இடம் பெற்ற அச்சுறுத்தல்கள் மற்றும் அடக்கு முறைகள் என்பனவும் உள்ளடங்கும். டெடிகமை தேர்தல் தொகுதியில் 'பத்கம' சாதியைச் சேர்ந்த கீர்த்தி ரத்தின, டட்லிசேனா நாயக்கவுடன் போட்டியிட்ட போது கீர்த்திரத்னவுக்கு வாக்களிப்போரை தேர்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவடிகளுக்கு அழைத்து செல்லும் சாட்டில் அவர்கள் பஸ் வண்டிகளில் ஏற்றப்பட்டு குறிப்பிட்ட வாக்குச் சாவடிகளுக்கு அதிக தூரத்திலுள்ள இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். இதன் மூலம் வாக்காளர்கள் விரும்பிய வேட்பாளர்களுக்கு வாக்களிப்பது தடுக்கப்பட்டது. றுவன்வெல்லைத் தொகுதியில் ஒரு பிரதேசத்தில் கலாநிதி என். எம். பெரேராவுக்கு வாக்களிப்போர் அச்சுறுத்தப்பட்டனர். அவர்கள் வாக்குச் சாவடிகளுக்குச் செல்ல எடுத்த முயற்சியை முறியடிக்கும் முகமாக லங்கா சமசமாஜக் கட்சி கொழும்பிலிருந்து ஆதரவாளர்களை அழைத்து உதவி வழங்க நிர்ப்பந்திக்கப்பட்டன. மத்திய கொழும்பு தேர்தல் தொகுதியில் நகர்ப்புற ''குண்டர்களின்'' ஒத்துழைப்பு ஏ.ஈ.குணசிங்கவுக்கு கிடைத்தது வாக்களிக்க மாட்டார்கள் எனத் தோன்றிய போது மத்தியதர வர்க்க குடியிருப்பாளர்களின் மத்தியதர வர்க்கத்தினர் இருவருக்கும் வாக்களிப்பைத் தவிர்ப்பதற்காக (மருதானையிலுள்ள) சில பிரதேசங்கள் மூடப்பட்டன. அதே போல பிலிப் குணவர்த்தனவின் கோட்டையான அவிசாவளையில் ஆதரவாளர்களில் ஒரு சிலர் குறிப்பிட்டளவு பலாத்காரத்தில் ஈடுபட்டதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. தேர்தல்களுக்குப் பின்னர் ஊர்வலங்கள் நடந்த போதிலும் அவை தனிநபர்களுக்கோ அல்லது சொத்துக்களுக்கோ பாதிப்பு ஏற்படும் வகையில் அமையவில்லை. ஒரேயொரு சம்பவமாக 1936இல் மாத்தளை தேர்தல் தொகுதிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட திருவாளர் போர்ணாட் அலுவிவகாரையைக் கொலை செய்வதற்குத் தோல்வியுற்ற தேர்தல் வேட்பாளர் திரு.கறலியத்தையின் சாரதி எடுத்த முயற்சி பற்றிப் பாரிய அளவில் செய்திகள் வெளியிடப்பட்டன. இக்கொலை முயற்சியிலிருந்து திரு.அலுவிகாரை தப்பித்துக் கொண்டார். ஆனால், அவர் அருகில் இருந்த வேறு இருவர் கொலையுண்டனர். சாரதிக்கு எதிராக கொலைக் குற்றஞ்சாட்டப்பட்டதோடு உரிய தண்டனையும் விதிக்கப்பட்டது. இது அரசியல் நோக்கத்துடன் காரணமாக இடம்பெற்ற குற்றச் செயலாக அமைந்த போதிலும், அதனைத் தமது எதிர்கட்சிக்கு எதிரான பிரசார ஆயுதமாகப்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தப்பட்டவில்லை. வரலாற்று ரீதியாக அதனை அரசியல் மயப்படுத்த ஸ்தாபன ரீதியான அரசியற் கட்சிகள் அன்று இருக்கவும் இல்லை.



1936-1956 கால கட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பல அபேட்சகர்கள் பலவையான தேர்தல் குற்றங்களையும் ஒழுங்கீனங்களையும் இழைத்தமையால் தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்தனர். எவ்வாறாயினும், ஓர் அரசியற் கட்சி படிப்படியாக கள்ள வோட்டைப் போட முயலுதல், அல்லது வாக்குச் சாவடியினுள் பலாத்காரமாக பிரவேசித்தல் போன்ற சட்ட மீறல்கள் இடம்பெறவில்லை. தேர்தல்களுக்குப் பின்னர் வன்முறைகளைத் தூண்டும் வகையில் எதிர்க்கட்சியினருக்கும் அவர்களுடைய உதவியாளர்களுக்கும் எதிராக படிப்படியாக இடம்பெற்ற ஓரங்கட்டல்கள் பற்றிய தகவல்களை நினைவுகூர முடியவில்லை. இரண்டு பிரதான கட்சிகள் இடையே அதிகாரப் பரிமாற்றம் தொடர்பான ஒரு குறிப்பிட்ட முறைமை இன்னும் சரியாக இனம் காணப்படவில்லை.





## 1956-1970 கால கட்டத்தின் போக்குகள்



1956க்குப் பிற்பட்ட காலத்தில் கூட்டு வன்முறை ஆரம்பமாகின்றது. 1956இல் முக்கிய அரசியல் மாற்றம் ஏற்பட்ட போதிலும் அது சமாதானமாகவே இடம் பெற்றது. மேற்படி தேர்தல் மிகவும் சமாதானமாகவும் கிரமமாகவும் இடம்பெற்ற அதே வேளை தேர்தலுக்குப் பின்னர் வன்முறைகள் இடம்பெறவில்லை. இவ்வாறான வன்முறை தலை தூக்காமை ஜனநாயக முறையின் வெற்றி என்றே குறிப்பிட வேண்டும். இத் தேர்தலின் மூலம் சொத்துடைமை வர்க்கத்திற்குப் படுதோல்வி ஏற்பட்டதோடு கண்டிய மரபு ரீதியான நிலப்பிரபுக்களினதும், பஸ் முதலாளிமாரினதும், உயர் மட்ட வியாபாரிகளினதும் தோல்வியாகவே அது அமைந்தது. பெரும்பான்மை சிங்களவரின் அதிகாரத்தை மீளக் கட்டியெழுப்புவது இத் தேர்தலின் பிரதான நோக்கமாக அமைந்தது. சிங்கள பௌத்த மக்கள் முகம் கொடுத்த கஷ்டங்களையும் இழந்த சலுகைகளையும் பற்றி நினைவு கூருவதாக







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமைந்தது. இச் சலுகைகளை இழப்பதன் மூலமாக நன்மையடைந்த அதே சமயம், இனத்துவ மத ரீதியான சிறுபான்மையினர் மீது அதிக வெறுப்பை சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்கு இது காரணமாக அமைந்தது. இவ்வெறுப்பானது இலங்கைச் சமூகத்தில் அதுவரை மறைந்திருந்த வன்முறைக்கு எவ்வளவு தூரம் பங்களிப்புச் செய்தது? 1957-1958 மிக முக்கியமான கால கட்டமென்று தர்க்கிக்க முடியும். சட்டம் செயல் இழந்தமை பற்றிய அனுபவங்களும், மேற்படி அனுபவங்கள் முக்கிய அரசியல் கட்சிகளால் பரந்துபட்ட சமூக எதிர்ப்பு உணர்வுகளாகவும் வெளிக்காட்டாமல் ஏற்றுக் கொண்டமை, அதாவது குற்றவாளிகளை அங்கீகரிக்கக்கூடிய வகையில் சட்டத்தின் பிடிக்குள் சட்டங்களை செயற்படுத்துபவர்களால் தேசிய மட்டத்தில் ஒரு செயற்பாடு அமுல்படுத்தப்படாமையினாலும் வன்முறை கலாசாரம் ஜனநாயக அரசியல் வாழ்க்கையை இறுக பிணைத்துக் கொள்ள உதவியது.





வன்முறை செயற்பாடுகளை சட்டமாக்குதல் பற்றிய வெள்ளிடை மலையான இவ்வுதாரணங்களில் ஒன்று காலிமுகத்திடலில் தமிழரசுக் கட்சி ஜனநாயக முறையில் நடத்தி எதிர்ப்பியக்கத்திற்கு பலாத்காரம் பிரயோகிக்க குண்டர்களுக்கு இடமளிக்கப்பட்டமையாகும். மற்றொரு உதாரணம் ஐக்கிய தேசியக் கட்சி கண்டி நோக்கிச் சென்ற பாத யாத்திரையைத் தடுத்து நிறுத்துவதற்கு அதிகாரத்தை ஈடுபடுத்துகையில் ஜனநாயக முறைகள் செயற்பட்டமை இச்சம்பவங்கள் மூலம் விளக்கப்படுகின்றது.



அரசியல் வன்முறைக்குட்பட்ட வரையறைப் பிரதேசத்தில் இனத்துவ நெருக்கடி ஓர் அங்கமாக அமைய வேண்டுமாயின் இனத்துவ நெருக்கடியால் வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட வேண்டும். ஒரு புறம் பெரும்பான்மையினரால் தண்டனைக்கு கீழ்ப்படியாது தவறுகளை செய்யத் தூண்டுதல்; மறுபுறம் அவர்கள் சட்டத்திற்கு கீழ்ப்படியாதவர்கள் என சிந்திக்க இடமளித்தல். இதன் பின்னர் உருவாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட இனத்துவ வன்முறை மற்றும் யுத்தம் காரணமாக அரசியல் வாழ்வில் பரந்து விரிந்த முறையில் வன்முறை தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பாதுகாப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துமுகமாக அரசியல் வாதிகளுக்கு ஆயுதங்களும் ஆயுதபாணிகளும் வழங்கப்பட்டுள்ளது. இராணுவத்திலிருந்து தப்பியோடுபவர்கள், கள்ளச்சந்தை ஆயுத விற்பனை என்பன காரணமாக ஸ்தாபன ரீதியான குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன. சட்டவிரோதமான குற்றவாளிகள் சில சமயங்களில் சட்டவிரோதமான அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தப்பட்டனர்.

## 1956-1970க்குப் பிற்பட்ட தேர்தல் வன்முறைகள், மற்றும் இளைஞர் கிளர்ச்சி

தேர்தலுக்குப் பிற்பட்ட வன்முறை மிகப்பாரிய அளவில் இக்கால கட்டத்தில் ஏற்பட்டது. முதல் முறையாக பரந்த அளவில் 1965 தேர்தல்களின் பின்னர் மாத்தளை மாவட்டத்தில் ஏற்பட்டது. இச் சம்பவத்தின் மூலமாகத் தான் மாத்தளை மாவட்டத்தில் தொடர்ச்சியாக இடம்பெறும் வன்முறைகளுக்கான விதைகள் விதைக்கப்பட்டன. இதன் வேர்கள் சில சமயம் 1936 தேர்தலின் பின்னர் இடம் பெற்ற கொலைகளுக்குக் காரணமாகும்.இவை மோதல்கள் வரை விரிவடைகின்றன. எவ்வாறாயினும் 1965தேர்தலுக்குப் பிற்பட்ட வன்முறைச் சம்பவங்கள் நாடு முழுவதும் தலைதூக்கவில்லை. 1970 தேர்தலுக்குப் பிற்பட்ட வன்முறைச் சம்பவங்கள் நாடு முழுவதும் பரவின. இங்கு அரச ஊழியர்கள், பல்கலைக்கழக கல்விமான்கள் உட்பட தனிநபர்களுக்கும், சொத்துக்களுக்கும் எதிராகவும் வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தலைத் தொடர்ந்தது உடனடியாக ஏற்பட்ட இளைஞர் கிளர்ச்சி


- முதன்முறையாக இடதுசாரி தொகுதியில் குறிப்பிடப்பட்ட ஜனநாயக முறைக்கும், மரபு ரீதியான முறைக்கும் உண்மையான அச்சுறுத்தல் ஏற்பட்டது.

- இளைஞர் கிளர்ச்சிக்கு எதிரான அரச பிரதிபலிப்பு மிகவும் சக்தி வாய்ந்த வன்முறையாக உருவெடுத்தது. அரசாங்கத்தின் இவ் வன்முறை சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பதற்கு அதற்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புகள் பற்றிய உணர்வு அரசமயமாக்கலின் ஒரு பகுதியாகும். ஜனநாயகத்திற்கு மாறுபட்ட அமைப்புகள் உருவாகுவதன் மூலமும் இனத்துவ நெருக்கடி தீவிரமடைவதன் மூலமும் இந் நிலமை மேலும் உக்கிரமடைந்துள்ளது.

இவ்வன்முறைகளில் எவ்வளவு தொகை சமூகத்தில் குற்றச் செயல்களை உருவாக்கும் பகுதியினருக்கு எதிரான பொலிஸ் நடவடிக்கைகளாக அமைந்திருந்தன. இன்றைய அரச இயந்திர முறைமைக்கு எதிராக இருந்த வைராக்கியத்தைத் தீவிரப்படுத்திய இளைஞர் போராட்டத்தை அடக்கும் முயற்சிக்கு இவ் வன்முறை எவ்வளவு தூரம் பயன்படுத்தப்பட்டது.


## 1977க்குப் பின்னர் வன்முறைச் சம்பவங்கள் வளர்ச்சியடைதல்

நான்காம் கட்டம் 1977க்குப் பின் ஆரம்பமாகின்றது. 1977 தேர்தலுக்குப் பின் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் மேலும் உக்கிரமடைந்தன. பயங்கரவாதம் அதிகரித்தது. தீ வைத்தல், கொலைகள் என்பன இடம் பெற்றன. சில நாட்கள் வரை பொலிஸாருக்கு விடுமுறை வழங்குவதாகவும் தோல்வியுற்ற கட்சிக்கும் அவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவாளர்களுக்கும் எதிராக மக்களின் எதிர்ப்பை வெளிக் காட்டுவதற்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதாகவும் சில ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்கள் பிரகடனப்படுத்தியதைக் காண முடிந்தது. தமது உதவியாளர்களது. சட்டத்தை மீறும் நடவடிக்கைகளுக்கும் வன்முறை நடத்தைக்கும் மௌனமாக அங்கீகாரம் வழங்குவதையே புதிதாக ஆட்சிக்கு வந்த கட்சி அமுல்படுத்தியது. இது தேர்தல் வன்முறையை மிக இழிவாக நோக்க வேண்டிய ஒரு சந்தர்ப்பமாகும். குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்துவதற்கும் கடுமையாக செயற்படுவதற்கும் 1970லும் 1977லும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆதரவாளர்களும் தமக்கு எதிரான கட்சி மீது வைராக்கியம் கொண்டனர். தமக்கு ஏற்பட்ட அநீதியை நினைவுபடுத்தி பழிவாங்கும் சந்தர்ப்பம் கிட்டும் வரை அவர்கள் காத்திருந்தனர். தேர்தல்களின் போது ஏற்படும் வன்முறைகள், மற்றும் வன்முறைகளுக்கு இரையாவோர் பற்றிய வலைப்பின்னல் நாடு முழுவதும் உருவாகியது. பழிவாங்கும் சந்தர்ப்பம் வரும் வரை காத்திருப்பது ஓர் அரசியல் கலாசாரமாக மாறியது.



தேர்தலுக்குப் பிற்பட்ட வன்முறை, தேர்தல் தோல்வி என்பவற்றின் மூலம் ஏற்படும் விளைவுகள் மற்றுமோர் செய்தியைக் கூறியது. அதன் மூலம் தேர்தல்களின் போது ஏற்படும் போராட்டத்தின் இயல்பையும் மாற்றியமைக்கும். அதாவது இப் போராட்டம் தமது பிரதிவாதியை தோல்வியுறச் செய்து ஆட்சிபீடம் ஏறுவதற்கு அல்லது ஆட்சி பீடத்தில் தொடர்ந்து இருப்பதற்கு சட்டபூர்வமானதும், சட்டவிரோதமான அனைத்தையும் பயன்படுத்தும் அதிக வன்முறை சுபாவத்தை கொண்ட போராட்டமாக மாறியது. அதாவது எதிர்க்கட்சியின் அதிகாரத்தை இல்லாதொழிக்கும் குறிக்கோளுடன் ஐக்கிய தேசியக் கட்சியை எப்போதும் பதவியில் இருத்துவதற்கு அவர்கள் விகிதாசாரத் தேர்தல் முறையை, அபிப்பிராய வாக்கெடுப்பு, இடைத் தேர்தல்கள் என்பன முன் எப்போதும் இல்லாத வகையில் வன்முறையையும், அச்சுறுத்தலையும் அமுல்படுத்தின. அதாவது எதிர்க்கட்சியின் பிரதி நிதிகளுக்கு தமது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமைகளைச் செய்வதற்கு இடமளிக்கப்படவில்லை. படிப்படியாக கள்ளவாக்களித்தல் ஆள்மாறாட்டம் செய்தல், அச்சுறுத்தல் என்பன பல்கிப் பெருகின. இவை பற்றி தேர்தல் ஆணையாளர் எடுத்து விளக்கியுள்ளார்.



1977க்கு பிற்பட்ட காலப்பகுதியில் ஜனநாயக முறையில் செயற்பட்ட கட்சிகள் அம்முறையை நெறிப்படுத்தின. மேற்படி முறையை ஒழித்துக் கட்டுவதற்கு வேறு சக்திகள் ஒன்று திரண்டன. இன நெருக்கடி கூர்மையடைந்ததோடு அதிருப்தி மேலோங்கியது. இதன் காரணமாக வன்முறை பல்வேறு மட்டங்களில் மையப்படுத்தப்பட்டது. இனநெருக்கடி காரணமாகத் தோன்றிய வன்முறையும் இளைஞர் போராட்டத்தின் வன்முறையும், இவற்றுக்குப் பதிலாக உருவாக்கப்பட்ட அரச வன்முறையும் அமுலாக்கப்பட்டன. இவை அனைத்திற்கும் இடையே சிறை வைக்கப்பட்ட ஜனநாயக முறைமை மேலும் சிக்கலாகியது. மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) அமுல்படுத்திய குரூரமான நடவடிக்கைகளும் அதற்குப் பதிலாக அரசபடைகளும், நிறுவனங்களும் கிளர்ச்சியை ஒடுக்குவதற்காக பதில் நடவடிக்கைகளும் காரணமாக தேசிய சனசமூகங்களு இடையேயான மோதல்களும் அரசியல் கட்சிகளிடையேயான பிணக்குகளும் வளர்ச்சி அடைந்தன. 1987-1990காலக்கட்டத்தில் ஏற்பட்ட அரசியல் கொலைகள் சம்பந்தமாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கியதேசியக் கட்சி என்பன ஒன்றை ஒன்று தொடர்ச்சியாக குற்றம் சுமத்தி ஜே.வி.பியுடன் உறவு கொண்டமைக்காக சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிராக யு.என்.பி. குற்றம் சாட்டுகின்றது. ஜே.வி.பியின் வன்முறைகள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியல் வாதிகள் மீது இலக்கு வைக்கப்படவில்லை. இராணுவம், மற்றும் ஆயுதக்குழுக்கள் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் உதவியாளர்களுக்கும் எதிராக ஈடுபடுத்தப்பட்டதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஐக்கியதேசியக் கட்சி மீது பழி சுமத்துகின்றது. ஜே.வி.பியின் பயங்கரவாதமும் அதற்கு எதிராக அரச பயங்கரவாதமும் நிலவிய காலகட்டத்திலே இடம் பெற்ற சம்பவங்கள் மக்கள் மத்தியில் சந்தேகத்தையும் வன்முறையையும் தூண்டியது.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனிடையில் வன்முறையின் கருவிகளை மிக இலகுவாகப் பெறமுடிந்தது பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரமாகின. தமது பாதுகாப்புக்காக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டன. அமைச்சர்களுக்கு பாதுகாப்புப் படை உத்தியோகத்தர்கள் வழங்கப்பட்டார்கள். ஆயுதங்களுக்காக சட்டவிரோதச் சந்தை உருவாகத் தொடங்கியது. இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. அவர்களின் பெரும்பான்மையினர் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டனர். அதேநேரத்தில் குண்டர்களின் தலைவர்கள் அரசியல்வாதிகளோடு பகிரங்கமாகவே உறவாடினார்கள். மேற்படி அரசியல்வாதிகள் தேர்தல் இயக்கங்களில் இரகசியமான வேலைத்திட்டங்களில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இந்த அரசியல் கலாசாரம் மறுசீரமைக்கப்படும் என்றும் தேர்தல் முறை கட்சி உறவுகள் என்பவற்றில் இடையே காணப்பட்ட வன்முறை மற்றும் பிளவுகள் இல்லாதொழிக்கப்பட்டு ஜனநாயக முறைமை உறுதியாக்கப்படும் என்றும் 1994ல் பதவிக்கு வந்த புதிய அரசாங்கம் உறுதியளித்தது. ஆனால் இன்றுவரை உறுதிமொழி நடைமுறைப்படுத்தப்படவில்லை. வடமேல் மாகாண சபைத் தேர்தலின் போது ஏற்பட்ட ஜனநாயக விரோத அனுபவங்களைக் கருத்திற் கொண்டு அத்தகைய நிகழ்வுகள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் இருக்க ஆட்சியாளர்கள் பொறுப்புக்கூறுவதாக உறுதியளித்தனர். ஆனால் பிரதான இரண்டு கட்சிகளின் விழுமியங்களில் எதுவிதமான மாற்றமும் ஏற்படவில்லை. இத்தகைய மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு நடைமுறையில் அனைத்துக் கட்சிகளும் ஒருங்கிணையக்கூடிய வகையில் மக்களின் அழுத்தத்தைதக் கொண்டு வரும் சாத்தியக்கூறுகள் உண்டாகும். அரசியல் வன்முறையை இல்லாதொழிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டத்தை தேசிய மட்டத்தில் பல்வேறு அம்சங்களில் அமுல்படுத்த வேண்டியுள்ளது. அதன் பொருட்டு பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துவதாக அமைதல் வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அவசியமான சட்ட மற்றும் நிறுவன ரீதியான மாற்றங்களைச் செய்வதற்கு ஆர்வம் காட்ட வேண்டும்.
- தம்மைத் தாமே கட்டுப்படுத்தக்கூடிய வகையில் அரசியல் நடத்தைகள் அமைதல் வேண்டும். ஜனநாயகத்தை அமுலாக்கக்கூடிய வகையில் அரசியல் கலாசாரத்தையும் விழுமியங்களையும் மாற்றியமைத்தல் வேண்டும்.
- மக்களின் அறிவை மேம்படுத்த வேண்டும். தொடர்ச்சியாக விழிப்புணர்வுடன் செயற்படக்கூடிய வகையில் சிவில் சமூகத்திற்கான ஆற்றலை வளர்த்தல் வேண்டும். பொறுப்புடன் செயற்பட வேண்டிய அவசியத்தை மேம்படுத்தல் வேண்டும். அதிகாரத்தை துஸ்பிரயோகம் செய்வதை தடுத்தல் வேண்டும்.





## ஆரம்ப செயற்பாடுகள் பத்து

இத்தகைய நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு :-



- அரசியல் வன்முறை பற்றிய விடயங்களை (கிராம மட்டத்திலிருந்து மேல் நோக்கி) பொதுமக்கள், சமூகத் தலைவர்கள், அரசியல்வாதிகள் என்போர் இடையே நாடு பூராவும் கலந்துரையாட வேண்டும்.
- அரசியல் வன்முறை அதிக அளவில் காணப்படும் தேர்தல் தொகுதிகள் மீது கூடுதலான கவனம் செலுத்தி சமாதானத்திற்காகவும் ஐக்கியத்திற்காகவும் ஆர்ப்பாட்ட இயக்கத்தை நடத்த வேண்டும்.



- வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபட்டமை குறித்து சான்றாதாரங்கள் உடையவர்கள் தேர்தல் வேட்பாளர்களாகப் போட்டியிட முன்வரும் பட்சத்தில் அத்தகைய நபர்களின் பெயர்களை வாபஸ் பெறுமாறு கட்சி சார்பற்ற முறையில் மக்கள் ஆர்ப்பாட்ட இயக்கங்கள் உருவாக்கப்பட வேண்டும்.



- ஒளிவு மறைவின்மை மற்றும் பொறுப்புக் கூறல் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான சட்டங்களை உருவாக்கி அரசியல் கட்சிகளின் அகநிலை மறுசீரமைக்கப்படக் கூடியவாறு கட்சி சார்பற்ற முறையில் மக்கள் ஆர்ப்பாட்ட இயக்கம் நடத்தப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தேர்தல்கள் பற்றிய நெறிமுறைகளையும் தேர்தல் வேட்பாளர்களையும் தெரிவு செய்யும் அடிப்படை பற்றியும், கட்சி ஒழுங்குமுறை பற்றியும் ஓர் உடன்பாட்டை ஏற்படுத்துவதற்கு அரசியல் கட்சிகளின் இசைவைப் பெறுவதற்கு கட்சி சார்பற்ற முறையில் மக்கள் ஆர்ப்பாட்ட இயக்கம் நடத்தப்பட வேண்டும்.



- அரசியல் வன்முறையைப் புறக்கணிப்பதற்காக அரசியல் வன்முறைகள் பற்றிய தகவல்களையும் அறிவையும் மேம்படுத்துவதற்கு தற்போது அமுல்படுத்தப்படும் ஊடக நிகழ்ச்சித் திட்டம் மேலும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இது பற்றிய புதிய நிகழ்ச்சித் திட்டங்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.



- சமாதான முறையில் பிணக்குகளுக்குத் தீர்வு காணக்கூடிய வகையில் பயிற்சி ஆற்றல் என்பவற்றை மேம்படுத்த பாடசாலைகளிலும் பல்கலைக் கழகங்களிலும் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல், முறைசார்ந்த மக்கள் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்.



- உதாரணமாக கருத்து மோதல்களை தீர்த்துக் கொள்வதற்காக வன்முறையை நாடுவதை வழக்கமாகக் கொண்ட உயர்கல்வி நிறுவனங்கள், புதிய சந்ததியினரின் அரசியல்வாதிகளைச் சேர்த்துக் கொள்ளும் ஓர் தரிப்பிடமாக அமைந்துள்ளது.



- பொலிஸ், அரச சேவை, தேர்தல் செயலகம், நீதித்துறை ஆகியவற்றின் சுயாதீனத்தை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் மக்களின் அழுத்தத்தை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.



- சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான தேர்தல் சட்டங்களைத் திருத்துவதற்கு ஆர்வமூட்டுதல் 1999 மாகாண சபைத் தேர்தல்கள் மற்றும் 1999 ஜனாதிபதித் தேர்தல் பற்றிய பப்ரல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சிபாரிசுளில் மேற்படி திருத்தங்களில் சில குறிப்பிடப்பட்டுள்ளன.



- அரசியல் வன்முறைகள் மற்றும் தேர்தல் வன்முறைகள் தொடர்பாக சட்டம் அமுல்படுத்துகை பற்றிக் கிரமமாக ஆராய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் தேர்தல் காலங்களில் அரசியல் வன்முறைகள் பற்றிய வரலாறு



## 1947 பாராளுமன்றப் பொதுத் தேர்தல்

- அரசியல் எதிரிகளைத் தாக்குதல், அவர்களுக்குத் தொல்லை கொடுத்தல், அச்சுறுத்தல் ஆகியவற்றை மீறிய அரசியல் வன்முறைகைக் காண முடியவில்லை.



- கிரியெல்லை தேர்தல் தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பெண் பாராளுமன்ற உறுப்பினர் யு.என்.பி. ஆதரவுக் கோஷ்டியினால் தாக்கப்பட்டார். இது பற்றி பொலிசாருக்கு முறையிட்ட போது அம்முறையீடு பதியப்படவில்லை.



- கள்ளவோட்டுப் போடுதல், தகைமைபெற்ற வாக்காளர்கள் பதியப்படாமை போன்ற குற்றங்கள் இடம் பெற்றன. சில சமயம் மேற்படி நடவடிக்கைகள் எதுவிதத் தடையுமின்றி இடம்பெற்றமையால் வன்முறை தோன்ற வேண்டிய அவசியம் எழவில்லை.



- பலம் வாய்ந்த எதிர்க்கட்சி இல்லாமை அரசியல் ரீதியாக சமூகம் பிளவுபடாமை காரணமாக தேர்தல் காலங்களில் ஒப்புநோக்கிய சமாதானம் நிலவியது.

## 1965 பாராளுமன்றப் பொதுத்தேர்தல்



- தேர்தல் ஆணையாளரின் முடிவின்படி தேர்தலின் பிந்திய முதல் வன்முறை மாத்தளையில் வெடித்தது. 1965 பாராளுமன்றப் பொதுத் தேர்தல்கள் வன்முறைச் சம்பவங்களற்ற வகையில் இடம்பெற்றது. ஆனால் தேர்தலின் பின்னர் மாத்தறையில் சில கடைத்தொகுதிகள் தீயிடப்பட்டன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1970 பாராளுமன்றத் தேர்தல்

- தேர்தல் தின நடவடிக்கைகள் சமாதான முறையில் அமைதியாக நடைபெற்றன.
- நாடு முழுவதும் தேர்தலுக்குப் பின்னர் வன்செயல்கள் பரவின. அதுவரை வன்முறை அதிக அளவில் இடம்பெற்ற ஓர் சந்தர்ப்பமாக இது அமைந்தது.

## 1977 பாராளுமன்றத் தேர்தல்

- தேர்தல் தினத்தில் சமாதானமான முறையில், தேர்தல் அமைதியாக நடந்தது.
- இலங்கையின் வரலாற்றில் நாடு முழுவதும் மோசமான முறையில் தேர்தலுக்குப் பிந்திய வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றன.



## 1981 மாவட்ட அபிவிருத்திச்சபைத் தேர்தல் (யாழ்ப்பாணம்)

- ஐக்கிய தேசியக் கட்சியின் அபேட்சகர் குழுவின் தலைவர் கலாநிதி. ஏ. தியாகராஜா அவர்கள் தேர்தல் இயக்கத்தின் போது அடையாளம் காணப்படாத குழுவினால் கொலை செய்யப்பட்டார்.
- தேர்தலை அண்மித்த கால கட்டத்தில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் கூட்டத்துக்குப் பாதுகாப்பு வழங்கிய பொலிஸ் அதிகாரிகள் மூவர் சுடப்பட்டனர்.
- அடையாளம் காணப்படாத சிலரால் யாழ்ப்பாண பொது நூலகம் தீ வைத்து அழிக்கப்பட்டது.
- பல தேர்தல் பெட்டிகள் திட்டமிட்ட முறையில் பறிமுதல் செய்து கடத்தப்பட்ட முதலாவது தேர்தலாக இது அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1982 அபிப்பிராய வாக்கெடுப்பு

- மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்புச் சட்டத்தை மீறும் போது பொலிசார் காண்பித்த உதாசீனமும் செயற்படாத்தன்மையும் காரணமாக ஆட்சி நீடிப்பிற்கு 'இல்லை' எனும் விடையை அளிக்க விரும்பிய வாக்காளர்கள் வாக்களிப்பில் இருந்து ஒதுங்கி இருக்கும் வகையில் மக்கள் மத்தியில் பீதி குடிகொண்டது. அரச ஆதரவாளர்களால் மேற்கொள்ளப்பட்ட அரசியல் அட்டூழியங்களும் தேர்தல் வாக்காளர்களைக் பயமுறுத்துவதும் இடையூறின்றி தேர்தல் தினம் வரை நடைபெற்றது.



அரசாங்கக் கட்சியினால் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட 'நக்ஸலைட் சதி' தொடர்பான முறைப்பாடுகள் ஆளும் கட்சியின் தேர்தல் களத்தின் முக்கிய கோஷமாகியது. அது அரசின் ஆதரவாளர்கள் மேற்கொண்ட வன்முறை நியாயப்படுத்துவதற்கு உபயோகிக்கப்பட்டது.

## 1988 மாகாண சபைத் தேர்தல்

- அரசியல் கொலைகளும் அரசியல் வன்செயல்களும் ஆண்டு முழுவதும் வியாபித்திருந்ததோடு அவை தேர்தல் காலங்களில் உக்கிரமடைந்தன.

- தேர்தல் அபேட்சகர்களைக் கொலை செய்தல், அபேட்சகர்கள் அவர்களின் ஆதரவாளர்கள் மற்றும் வாக்காளர்கள் கொலை அச்சுறுத்தல்களுக்கு ஆளாதல் போன்ற வன்செயல்கள் அனைத்து இடங்களிலும் காணக்கூடியதாக இருந்தது.

- தேசப்பற்றுள்ள (தேசப்பிரமி) மக்கள் இயக்கத்தின் கொலை அச்சுறுத்தல்களைப் பொருட்படுத்தாது தேர்தலில் போட்டியிட முன்வந்த ஐக்கிய தேசியக் கட்சியினதும் ஐக்கிய சோசலிச கூட்டணியினதும் தேர்தல் அபேட்சகர்கள் பயங்கரவாத வன்செயல்களுக்கு இரையானார்கள்.

UNIVERSITY ... 27 SEP 2006 LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1988 ஜனாதிபதித் தேர்தல்


- தேர்தலுக்கு முன்னரும் தேர்தல் தினத்திலும் வன்செயல்கள் கொடூர சுபாவத்தை எடுத்தன. தேர்தலுக்கு பின்னர் வன்செயல்கள் ஒப்பீட்டளவில் குறைந்த மட்டத்தில் காணப்பட்டன.

- இலங்கையின் தேர்தல் வரலாற்றில் முதல் முறையாக தேர்தலில் போட்டியிடாத குழு ஒன்று (ஜே.வி.பி-டி.வே.பி) தேசப்பற்றுள்ள மக்கள் இயக்கம் இலங்கை முழுவதும் தேர்தல்களை சீர்குலைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

- வெற்றி பெற்ற ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சிறுவித்தியாசத்தில் தோல்வி கண்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையே வன்முறைத் தாக்குதல்கள் மிகச் சிறிய அளவிலேயே காண முடிந்தது.

- கிளர்ச்சிக்காரர்கள் தேர்தல்களை சீர்குலைக்கும், நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது ஐக்கிய தேசியக் கட்சியினரையே கூடிய இலக்காகக் கொண்டனர்.

- வன்செயல்களின் சுபாவம் வாக்காளர்களுக்கும் தேர்தல் உத்தியோகத்தர்களுக்கும் கொலை அச்சுறுத்தல் விடுத்தல், மரங்களை வெட்டி வீதித் தடைகளை ஏற்படுத்துதல், மின்கம்பங்களுக்கும் மின்கம்பிகளுக்கும் சேதங்களை விளைவிப்பது மூலம் தேர்தல் தினங்களில் பல பிரதேசங்கள் இருட்டில் வைக்கப்பட்டன. பரவலாக வியாபித்த தேர்தல் கொலைகள் தேர்தல் இயக்கம் முழுவதிலும் செயற்படுத்துவதன் மூலம் வாக்காளர்கள் அச்சுறுத்தப்பட்டனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1989 பாராளுமன்ற பொதுத்தேர்தல்

- அரசியல் கொலைகள் மற்றும் கொலை அச்சுறுத்தல்களுக்கு தேர்தல் அபேட்சகர்கள் உள்ளடக்கப்பட்டனர். தேர்தல் இயக்கம் முழுவதும் இது இடம்பெற்றது.
- முன்னைய ஆண்டில் இடம்பெற்ற தேர்தல்களின் போது ஒப்பீட்டளவில் வன்முறைக்கு உள்ளாகாத ஸ்ரீ லங்காக சுதந்திர கட்சியினரும் இத் தேர்தலில் வன்முறைக்கு இரையானார்கள்.



- டிசம்பர் 19 முதல் பெப்ரவரி 10 வரை 669 அரசியல் கொலைகள் இடம்பெற்றன.
- வாக்காளர்களுக்கும் தேர்தல் உத்தியோகத்தர்களுக்கும் எச்சரிக்கை விடுத்தலும், பயமுறுத்தலும், ஆயுதம் தாங்கிய குழுக்களினால் பலவந்தமாக வாக்குப் பெட்டிகளை நிரப்புதல் போன்ற செயல்களும் இடம் பெற்றன.

## 1993 மாகாண சபைத் தேர்தல்கள்

- நாட்டின் ஜனாதிபதியினதும் எதிர்க்கட்சித் தலைவரினதும் கொலைகள் ஒரு வார இடைவெளியில் சம்பவித்த போதிலும் முன்னதாக நடைபெற்ற இரண்டு தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் 1993 மாகாண சபைத் தேர்தல்கள் சமூக அமைதி நிலவிய ஒரு கால கட்டத்தில் இடம்பெற்றது.
- பரவலாக இருந்த அரசியல் வன்முறை இத் தேர்தலின் போது பாரதூரமான பிரச்சினையாக இருக்கவில்லை.
- பொலிஸ் தேர்தல் செயலாளர் காரியாலயம் தேர்தலுக்கு முன் தினம் வெளியிட்ட அறிக்கையின்படி நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்தது முதல் முறையீடுகள் கிடைத்தன. முறையீடு செய்யப்பட்ட குற்றங்களைப் பின்வருமாறு வகைப்படுத்த முடியும். கொலை செய்ய முயற்சித்தல் தாக்குதல் மேற்கொள்ளல், எச்சரித்தல், அரசியல் கட்சி தொண்டர்களைப் பயமுறுத்தல், தீ வைத்தல், கடத்திச் செல்லல் மற்றும் வழிபறி கொள்ளைகள் என்பன ஆகும்.


UNIVERSITY OF PERADENIYA
27 SEP 2006
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1994 பாராளுமன்ற பொதுத் தேர்தல்

- ஆகஸ்ட் 16ம் திகதி நடைபெற்ற தேர்தலுக்கு முன்னரான 6 கிழமைகளுக்குள் தேர்தல் இயக்கத்தில் வன்முறை பரவலாக நடைபெற்றதுடன் ஜுலை 11ம் திகதி நியமனப் பத்திரங்கள் ஒப்படைத்த பின் இந்நிலை மேலும் உக்கிரமடைந்தது.

- பொலிஸ் தேர்தல் காரியாலயத்தில் 16ம் திகதி காலை 6 மணிக்கு அறிவிக்கப்பட்டதன்படி ஏதோ ஒரு வகையிலான தேர்தல் தொடர்பான பயமுறுத்தல்கள் எண்ணிக்கையின் கூட்டுத் தொகை 2092 ஆக அறிவிக்கப்பட்டது. மனிதக் கொலைகள் இடம் பெற்றன.



- பல வன்செயல்கள் தேர்தல் இயக்கத்தில் இடம் பெற்றது. தேர்தல் தினத்தில் ஒப்பீட்டளவில் அமைதியாக இருந்த போதிலும் வன்முறை நெருக்கடி என்பன முற்றிலும் இல்லாதொழிக்கப்படவில்லை.

## 1996 கூட்டுறவுத் தேர்தல்

- 1994இல் நடைபெற்ற ஒப்பீட்டளவில் அமைதியான பாராளுமன்ற மற்றும் ஜனாதிபதித் தேர்தலின் பின் தேர்தல் செயற்பாட்டிற்கு உறவு கூறும் அரசியல் வன்முறை மீண்டும் ஆரம்பமாகியது. 1996ல் கூட்டுறவுச் சங்கங்களின் முகாமைத்துவத்துக்கு 1996 முதல் கட்டத்தில் நடைபெற்ற தேர்தல்களுடன் அரசியல் வன்முறை நாடு முழுவதும் பல பிரதேசங்களில் தலைதூக்கியது மிகவும் கலைக்குரிய விடயமாக அமைந்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசாரக் கூட்டத்தை கலைப்பதற்கு வன்முறை பயன்படுத்தப்பட்டது மிகக் கவலைக்குரியதுமாகும். நீர்கொழும்பு, ஆனமடுவை, மாத்தளை, ஹசலக, கலேவல மற்றும் மத்துகம போன்ற பரந்த பிரதேசங்களில் இத்தகைய சம்பவங்கள் இடம்பெற்றன. இவற்றில் அதிக சம்பவங்களின் போது தேர்தலின் செயற்பாட்டாளர்கள் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டதுடன். கூட்ட பிரச்சாரத்துக்காகப் பயன்படுத்தப்பட்ட பதாகை போஸ்டர்கள் என்பன கிழித்து அழிக்கப்பட்டதுடன் பயமுறுத்தல் மூலம் மக்கள் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல் தடுக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1997 உள்ளூராட்சித் தேர்தல

- இத் தேர்தலில் நடைபெற்ற வன்செயல்கள் இதற்கு முன்னர் எந்தவொரு உள்ளூராட்சித் தேர்தலிலும் இடம் பெறவில்லை.

- பாரதூரமான வன்முறைச் சம்பவங்களில் நூற்றுக் 80 வீதம் ஐக்கிய தேசியக் கட்சியினதும் பொதுஜன முக்கிய முன்னணியினதும் ஆதரவாளர்களுக்கிடையே நடைபெற்றது.


- நியமனப் பத்திரம் ஏற்றுக் கொள்ளும் தினத்தில், பொதுஜன ஐக்கிய முன்னணியின் இரத்தினபுரி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரை அவர்கள் கொலை செய்யப்பட்டார். இது முதல் சம்பவமாகும். ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சுசந்த புஞ்சி நிலமே மற்றும் இரத்தினபுரியின் முன்னாள் ஐக்கிய தேசிய கட்சியின் நகரபிதா மகிந்த ரத்னதிலக்க ஆகியோர் மீது கொலைக் குற்றம் சுமத்தப்பட்டது.

- கொலை, தேர்தலுடன் அரசியல் வன்செயல்கள் விசேடமாக அரசியல்வாதிகளின் சட்டத்துக்கு முரணாக மற்றும் அங்கீகாரமற்ற ஆயுதங்களின் உபயோகம் தொடர்பான சமூகத்தின் கண்களைத் திறப்பதாக அமைந்தது.

- இரத்தினபுரி பிரதேசத்தில் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் குற்றச்சாட்டுக்களுக்கு ஆளான கொலையாளிகளின் குடும்ப அங்கத்தவர்கள் அவர்களது சொத்துக்கள் என்பன அழிக்கப்பட்டதுடன் பொலிஸ் நிலையங்கள் சிலவும் தாக்கப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1999 வடமேல் மாகாண சபைத்தேர்தல் (ஜனவரி)



- பாரதூரமான வன்முறைத் தேர்தலாக அமைந்தது. சமீபகால வரலாற்றில் காணக் கூடிய மோசமான வன்முறைகளுடன் கூடிய தேர்தலாக இதனைக் குறிப்பிட முடியும். தேர்தலுக்கு முன்னைய வன்செயல்கள் முக்கியமாக ஐ.தே.கட்சிக்கு எதிராக பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களால் செய்யப்பட்டன.

- தேர்தல் நடைபெற்ற தினத்தின் வன்முறை பெறுபேறுகளைத் தீர்மானிக்கும் நோக்கில் செய்யப்பட்டது. நன்கு ஸ்தாபன ரீதியாக திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டது. ஐ.தே.க. இதனை எதிர்த்து செயற்படாது பின்வாங்க முன்வந்தமையால் குறைந்த மட்டத்திலேயே வன்செயல்கள் இடம்பெற்றன.

- தேர்தல் இயக்கத்தில் எதிரிகளை அடக்கி அவர்களைச் செயல் இழக்க செய்தல் முக்கிய இலக்காகக் கையாளப்பட்டது.

- மிகவும் பிரசித்தி பெற்ற செயல்களாவன, வாகனங்களில் நடமாடிய ஆயுதங்கள் தாங்கிய குழுக்கள் நடுவீதியில் நடமாடுவதன் மூலம் வாக்காளர்களையும் செயற்பாட்டாளர்களையும் எச்சரித்தல், தாக்குதல் இடம்பெற்றது. பெண்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் எதிரான வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. தேர்தல் கூட்டங்களை தாக்குவதன் மூலம் அவற்றை செயல் இழக்கச் செய்தல், கட்சி காரியாலங்களுக்குத் தீ வைத்தல், அழித்தல், தேர்தல் நடைபெறும் இடத்தில் உள்ள பிரதிநிதிகளை விரட்டியடித்தல் போன்றவை குறிப்பிடத்தக்கவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1999 மாகாண சபைத் தேர்தல் (ஏப்ரல்) 5 மாகாணங்கள்

- வன்முறையற்ற தேர்தல் ஒன்றை உறுதிப்படுத்த அரசு, விசேடமாக ஜனாதிபதி முன்வந்தார். வன்செயல்களை அடக்குவதற்கு விசேட பொலிஸ் பாதுகாப்புப் படை வரவழைக்கப்பட்டது.

- கருத்து வேறுபாடுகளுடன் கூடிய வடமேல் மாகாண சபைத் தேர்தலுக்கு ஒப்பாக தாக்குதல்களுடன் கூடிய சம்பவங்கள் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் காலத்துக்கு ஏற்ற மத்தியஸ்தம் இடம் பெற்றது. விசேடமாக எல்லாக் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் கூடிய அவதானிப்புக் குழு அத்தகைய சம்பவங்கள் ஏற்படாதவாறு தடுத்தது.



- அறிவிக்கப்பட்ட வன்செயல்களாவன, வாக்காளர்களுக்கும் கட்சி ஆதரவாளர்களுக்கும் செயற்பாட்டாளர்களுக்கும் அச்சுறுத்தல் மற்றும் பயமுறுத்தல், தாக்குதல் பலத்த காயங்கள் ஏற்படுத்தலும் தீ வைத்தலும் இடம் பெற்றன. கட்சி காரியாலயங்கள் தாக்கப்பட்டன. தாக்குதல் நடாத்துதல் என்பன 4 மனித கொலைகள் நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

## 1999 மாகாண சபைத்தேர்தல் (ஜுன்) தென்மாகாணம்

- தேர்தலுக்கு முன்னர், தேர்தல் நடைபெற்ற தினம், தேர்தலின் பின்னர் ஆகிய கால கட்டங்களில் ஒப்பீட்டளவில் குறைந்த வன்செயல்கள் இடம்பெற்றன.

- முறைப்பாடு செய்யப்பட்ட வன்செயல்களின் அதிக எண்ணிக்கையானவை பொதுஜன ஐக்கிய முன்னணியினால் மக்கள் விடுதலை முன்னணிக்கு (ஜே.வி.பி) எதிராக செய்யப்பட்டவை ஆகும்.

- ஜே.வி.பியின் வன்செயல்கள் ஐ.தே.க. பொ.ஐ.மு. ஆகியவற்றுக்கெதிரானது என முறைப்பாடு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகளவில் இடம்பெற்ற வன்செயல்கள்

- தனிநபர்கள் அல்லது குழுக்கள் மூலமான தாக்குதல்கள்
- அலங்காரங்கள், பிரசார ஆவணங்களன் கட்சிக் காரியாலங்களுக்கு நட்டம் ஏற்படுத்தலும் அழித்தலும்,
- வாக்காளர்கள் கட்சித் தொண்டர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களை எச்சரித்தலும் அவர்களைப் பயமுறுத்தலும்

## 1999 ஜனாதிபதித் தேர்தல் (டிசம்பர்)

- தேர்தல்களுக்கு முன்னர் வன்செயல்கள் நிறைந்திருந்தன. வடக்கு கிழக்கு மாகாணங்களில் வன்செயல்கள் தொடர்பாக முக்கியமான முறைப்பாடுகள் எல்.ரி.ரி.ஈ. இயக்கத்துக்கு எதிராகவே மேற்கொள்ளப்பட்டது. நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பிரதானமாக ஐக்கிய தேசியக் கட்சியினதும் பொதுஜன ஐக்கிய முன்னணியினதும் தொண்டர்கள் தங்களுக்கிடையே மோதிக் கொண்டனர்.

- தேர்தலுக்கு முன்னைய கட்டத்தில் எப்பாவல ஐக்கிய தேசியக் கட்சிக் கூட்டத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிக்கொத்த மீது மேற்கொள்ளப்பட்ட குண்டர்களின் தாக்குதல்களும் குறிப்பிடத்தக்கவை.

- பிரசார நடவடிக்கையின் கடைசி தினம் இரவு கொழும்பு நகரசபை மைதான வளவில் நடைபெற்ற பொதுஜன ஐக்கிய முன்னணி கூட்டத்திலும், ஜா எலவில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சிப் பிரசாரக் கூட்டத்திற்கும் மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதல் தொடர்பாக எல்.ரி.ரி.ஈ. யினர் மீது குற்றம் சாட்டப்பட்டது. இச் சந்தர்ப்பத்தில் இரு கட்சியினரதும் தொண்டர்களும் செயற்பாட்டாளர்கள் பலரும் மரணித்ததுடன் இன்னும் பலர் பலத்த காயங்களுக்கு உள்ளானார்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கட்சி செயற்பாடுகளுக்கு எதிராக எச்சரிக்கை விடுத்தல், பயமுறுத்தல், தீ வைத்தல், சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல் மனிதக் கொலைகள் போன்ற பல வன்செயல்கள் தேர்தல் கால கட்டத்தில் அறிவிக்கப்பட்டன.

- தேர்தலுக்குப் பின்னைய கால கட்டம் பயங்கரவாத மற்றும் ஒடுக்கு முறைக்கால கட்டமாக அறிமுகப்படுத்த முடியாவிடினும் தீ வைத்தல், தாக்குதல்கள் பலத்த காயங்களுக்கு உள்ளாக்குதல் என்பன இடம்பெற்றன. அதே சமயம், சொத்துக்களை அழித்தல், கடத்திச் செல்லப்படல், கொலை செய்ய முயற்சித்தல், கொலை செய்தல் போன்ற பல சம்பவங்கள் நிகழ்ந்தன என அறிவிக்கப்பட்டன.

UNIVERSITY OF PERADENIYA
27 SEP 2006
LIBRARY

## பாராளுமன்ற பொதுத் தேர்தல் - 2000 (ஒக்டோபர்)

- இதுவரை நடைபெற்ற பாராளுமன்ற பொதுத் தேர்தல்களில் போட்டியிட்ட வேட்பாளர்களை விட 2000ம் ஆண்டு பொதுத் தேர்தலில் அதிக எண்ணிக்கையிலான வேட்பாளர்கள் (5048) போட்டியிட்டனர். இம்முறை தேர்தலில் 29 அரசியற் கட்சிகளும் 99 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிட்டன. வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் யுத்த சூழ்நிலை காணப்பட்டாலும் கூட இலங்கையின் 22 தேர்தல் மாவட்டங்களிலும் வாக்களிப்பினை நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இராணுவ கட்டுப்பாடற்ற பிரதேசங்களைச் சார்ந்த வாக்காளர்களின் நன்மை கருதி கூட்டு வாக்களிப்பு நிலையங்கள் உருவாக்கப்பட்டன.



- இத்தேர்தலை 1994ம் ஆண்டு பொதுத் தேர்தலுடன் ஒப்பிடுகையில் தேர்தல் தினத்திற்கு முன்பு நடைபெற்ற வன்முறைச் செயல்களின் தொகை குறைவாகக் காணப்பட்டமை ஒரு விசேட நிகழ்வாகும். ஆனாலும் 2000ம் ஆண்டு, (ஒக்டோபர் - 10) பொதுத் தேர்தல் தினத்தன்று நடைபெற்ற வன்முறைகள் முன்னொரு போதும் நடைபெறாத அளவிற்கு பாரதூரமானதாக அமைந்திருந்தன. தேர்தல் கண்காணிப்பாளர்களின் அறிக்கையின்படி, தேர்தல் நிலையங்கள் பலவற்றின் வாக்களிப்பினை ரத்துச் செய்யவேண்டி ஏற்பட்டது என்றும் தேர்தல் ஆணையாளருக்குக் கிடைத்த

599958

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிக்கைகளைக் கருத்திற் கொண்டதன் பின்பு 22 தேர்தல் நிலையங்களை அவர் ரத்துச் செய்தார் என்றும் அவ்வறிக்கை மேலும் குறிப்பிட்டது. தொகுத்து நோக்கும் போது யாழ்ப்பாண மற்றும் வன்னி மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய 20 தேர்தல் மாவட்டங்களில் 12 தேர்தல் மாவட்ங்களிலும் சுதந்திரமானதும் நீதியானதுமான முறையில் தேர்தல் நடைபெற்றது.

- அச்சந்தர்ப்பத்தில் அதிகாரத்தில் இருந்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கமானது, சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் ஒன்றினை நடத்துவதற்கு தேர்தல் ஆணையாளர் மேற்கொண்ட நடவடிக்கைகள் சிலவற்றினை சந்தேகக் கண்கொண்டே பாரத்தது. வாக்காளர் அட்டைகளில் மோசடி நடப்பதனைத் தடுப்பதற்காக தேர்தல் ஆணையாளர் இரகசியமான முறையில் அச்சிட்ட ஸ்டிக்கர்களை இரகசியப் பொலிசார் கைப்பற்றியதனை அடுத்து சற்று குழப்பமான சூழ்நிலை உருவாகியது.

- இவ்விடயம் தொடர்பாக தேர்தல் ஆணையாளர் விளக்கம் அளித்ததன் பின்பு சந்தேகம் நீங்கினாலும் அதிகாரத்தில் இருக்கும் கட்சியானது தனது அரசியல் இலாபத்திற்காக எந்தவொரு நிகழ்வினையும் தனக்கு சாதகமாக மாற்றுவதற்கு எடுக்கும் முயற்சிகளில் இதுவும் ஒரு உதாரணமாகும்.

- இத்தேர்தலில் கூடுதலான வன்முறைச் சம்பவங்கள் நிகழ்த மாவட்டமாக கம்பா மாவட்டம் குறிப்பிடப்பட்டது. மிகவும் குறைந்த வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்த மாவட்டமாக கொழும்பு மாவட்டம் குறிப்பிடப்பட்டது. மேலும் விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலினால் மூதூரில் ஒரு வேட்பாளரும் 24 பொது மக்களும் கொல்லப்பட்டனர். மதவாச்சியில் மேற்கொள்ளப்பட்ட இதே போன்றதோர் தாக்குதலில் 10 பேர் பலியானதோடு 40 பேர் காயமடைந்தனர்.

- இத்தேர்தலின் போது ஆட்சியிலிருந்த கட்சி தனது தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக அரச சொத்துக்களை பெருமளவில் பயன்படுத்தியதனை காணக்கூடியதாக இருந்தது. அத்துடன் அரசாங்க கட்டுப்பாட்டின் கீழ இயங்கிய அச்சு மற்றும் இலத்திரனிய ஊடகங்களின் மூலம் தனது தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டது. இவ் ஊடகங்களில் எதிர் கட்சியினருக்கு சமவாய்ப்பினை வழங்கவில்லை. ஆனால் எதிர்க்கட்சிகளுக்கு எதிராக பலவிடயங்களை வெளியிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராளுமன்ற பொதுத் தேர்தல் 2001 (டிசம்பர்)

- ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 12 பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சி ஆசனங்களில் அமர்ந்ததன் காரணமாக பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை இழக்க நேரிட்டது. இதன் பின்பு ஜனாதிபதியினால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. இவ்வாறு கட்சி மாற்றத்தின் பின்பு நாட்டில் அரசியல் சூழ்நிலையும் மோசமான நிலையினை அடைந்தது. சுருக்கமாக கூறினால் இலங்கையின் வரலாற்றில் நடைபெற்ற தேர்தல்களில் மிகவும் வன்முறையான தேர்தலாக இத்தேர்தலை சுட்டிக் காட்ட முடியும். தேர்தல் தினத்தன்று மட்டும் நடைபெற்ற சம்பவங்கள் காரணமாக 24 பேர் பலியாகினர்.

- இப்பாராளுமன்றத் தேர்தலில் பதிவுச் செய்யப்பட்ட 26 அரசியல் கட்சிகளும் 130 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிட்டன. அரசியல் கட்சிகளின் ஊடாக 3196 வேட்பாளர்களும் சுயேட்சைக் குழுக்களின் ஊடாக 1414 வேட்பாளர்களும் போட்டியிட்டனர். பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களில் 76% மானோர் தேர்தலின் போது வாக்களித்தனர். மிக குறைந்தளவிலான (31.14%) வாக்குப் பதிவு யாழ்ப்பாண மாவட்டதில் இடம் பெற்றது. அதேவேளை மிகக்கூடுதலான வாக்குப் பதிவானது 83.4 இரத்தினபுரி மாவட்டத்தில் இடம்பெற்றது. இராணுவ கட்டுப்பாடற்ற வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் வாக்காளர்களின் நன்மை கருதி கூட்டு வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டன. ஆனாலும் இப்பிரதேசங்களுக்கு வாக்களிப்பதற்கு வந்த தமிழ் வாக்காளர்களுக்கு இராணுவத்தினரால் இடையூறு விளைவிக்கப்பட்டது என்று அறியக்கூடியதாக இருந்தது.

- தேர்தல் வன்முறைச் செயல்கள் தொடர்பாக பொது மக்களிடமிருந்தும் பிரசைகளிடமிருந்தும் பல்வேறுபட்ட சங்கங்களிடமிருந்தும் எழுந்த எதிர்ப்புகள் காரணமாக பிரதான அரசியல் கட்சிகள் இரண்டிற்கும் இது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இதற்கமைய பொதுஜன ஐக்கிய முன்னணி தனது முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தின்போது தனது கட்சியை சார்ந்த வேட்பாளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நியாய

UNIVERSITY OF PERADENIYA 27 SEP 2006 LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்ம கோட்பாடுகளை உள்ளடக்கிய ஒரு கொள்கை பிரகடனத்தினை வெளியிட்டது. இதனை மீறும் வேட்பாளர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டது. ஆனாலும் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் தீவிரமடைந்த பின்பு இவ்விடயம் தொடர்பாக எந்தவித முக்கியத்துவமும் வழங்கப்படவில்லை. தேர்தல் வன்முறைக்கு எதிர்ப்பினை தெரிவிக்கும் வகையில் மக்கள் அமைப்புகள் ஏற்பாடுச் செய்த மஞ்சள் பட்டி அணியும் நடவடிக்கையானது வெற்றியளித்து.

◆ 2000ம் ஆண்டு பொதுத்தேர்தலின் போது இடம்பெற்ற வன்முறைகளை விட இம்முறை அதிகமாகவே வன்முறைகள் இடம்பெற்றன. ஆனாலும் இவ்வுன்முறைகள் பெரும்பாலும் குறித்த பிரதேசங்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டதாகவே காணப்பட்டன. குருணாகலை, நுவரெலியா, புத்தளம், அம்பாந்தோட்டை அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் இதற்கு முன்பு நடைபெற்ற அனைத்து தேர்தல்களிலும் போன்று இம்முறையும் வன்முறைச் சம்பவங்கள் இம்மாவட்டங்களில் இடம்பெற்றதாக அறியக்கிடைத்தன. இவ்வன்முறைகளுடன், இராணுவத்திலிருந்து தப்பியோடிய நபர்கள் மற்றும் பாதாள உலகைச் சார்ந்த பிரபல்யமான குற்றவாளிகள் நேரடியாக தொடர்புபட்டிருந்தனர். அத்துடன் இவ் வன்முறைகள் முறையாக திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டதைப் போன்றே இருந்தன. அரசியல் எதிரிகளை அச்சுறுத்துவதற்கும் அவ்வாறான அச்சுறுத்தல்களில் இருந்து பாதுகாப்பினைப் பெறுவதற்கும் வன்முறையில் ஈடுபடுவது இலங்கையின் அரசியல் கலாசாரத்தில் ஒரு அங்கமாக மாறியிருப்பது வேதனைக்குரிய விடயமாகும். பெரும்பாலும் ஆட்சியிலிருக்கும் கட்சி, வன்முறைச் செயல்ககளில் ஈடுபடுவது அதிகம் என்று குற்றம் சுமத்தப்படாலும் ஏனைய கட்சிகளும் இக்குற்றச்சாட்டில் இருந்து தப்பித்துக் கொள்ள முடியாது. எனவே ஆட்சி அதிகாரமானது மாற்றமடைந்ததன் பின்பு 1977ம் ஆண்டில் நடைபெற்ற வன்முறைகளைப் போன்று நடைபெறாவிட்டாலும் தேர்தல் நடைபெற்று முடிந்ததன் பின்பு ஓரளவு வன்முறைகள் தலைதூக்கின. பொதுமக்கள் எந்தவித கட்சி பேதமும் இன்றி அரசியல் வன்முறைகளை எதிர்த்து வருகின்றனர். ஆயினும் அரசியல் தலைவர்கள் இதனை கருத்திற் கொள்வதாகத் தெரியவில்லை.

UNIVERSITY OF PERADENIYA
27 SEP 2006
LIBRARY
599958



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
27 SEP 2006
LIBRARY

வெளியீடு
**சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு**
93/10, துடுகெமுனு வீதி, கொழும்பு 6.
தொலை : 2824425, 2818675, 5557011/13
பக்ஸ் : 5557012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org